2004 ஜூலை 27] [திரு. சி. பொன்னையன்]

சரியானது என்பது தெளிவுபடும். திரு. கருணாநிதி அவர்கள் அவைக்கு வருவதன் மூலமாகவோ அல்லது அவையில் நடக்கும் விவாதங்களை முழுமையாகப் படிப்பதன் மூலமாகவோதான் அவையில் நடக்கும் உண்மை நிலைகளை அவர் தெரிந்துகொள்ள இயலும். அவையில் பேசப்படும் முழுச் செய்திகளும் பத்திரிகைகளில் சில நேரம் முழுமையாக வருவதில்லை. பத்திரிகைகளில் வரும் செய்திகளை மட்டும் நம்பி, அவைக்கு வராத ஒரு சட்டமன்ற உறுப்பினர், அவைக்கு வெளியே பேரவை உரிமை மீறும்வகையில் தவறாகப் பேசுவதோ, தவறாக எழுதுவதோ, அவை உரிமை மீறும் முறையற்ற செயலாகும். இதைத்தான் மாண்புமிகு அண்ணன் சந்தானம் அவர்கள் தெளிவுபடுத்துகிறார்கள். முன்னாள் முதலமைச்சராக அவர் இருந்தபோது, பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளை அப்படியே நம்பிக்கொண்டு பேசக்கூடாது என்று அவர் கூறியிருக்கிறார் என்பதைத்தான் மாண்புமிகு அண்ணன் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். இந்தப் பிரச்சினை, அவை உரிமை மீறல் குழுவிற்குப் பேரவையால் அனுப்பப்பட்டுவிட்டது. பேரவைக்கு வெளியே பேசுவதற்கும் எழுதுவதற்கும் பதிலாக அவை உரிமை மீறல் குழுவிற்கு நேரில் வந்து, திரு. கருணாநிதி தனது கருத்துகளை விளக்கலாம்; விளக்கிக்கூற வேண்டும். அவை உரிமை மீறல் குழுவிற்கு நேரில் வந்து, அவைக் குறிப்புகளை அவை உரிமைக் குழு மூலமாக நேரில் படித்துப் பார்த்து உண்மை நிலைகளைப் புரிந்துகொள்ளலாம், புரிந்துகொள்ள வேண்டும். அவை உரிமை மீறல் குழுவிற்கு ஏற்கெனவே இந்தப் பிரச்சினை பேரவையால் அனுப்பப்பட்டுள்ளது. அவை உரிமை மீறல் குழு உண்மை நிலை என்ன, அவர் பேசுவதில் உண்மை இருக்கிறதா இல்லையா என்பதனைச் சட்டப் பேரவை விதிகளுக்குட்பட்டு வெளிப்படுத்துகின்ற உண்மை நிலையை உணர்ந்து அவர் செயல்பட வேண்டும். இதை மட்டுமே நான் அவைக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 11–10

3. அறிவிப்பு

தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS